**கொழும்புப் பல்கலைக்கழகம்**

**மீள்குடியமர்வு, இடப்பெயர்வு, காலநிலைமாற்றம் மற்றும் நகரமயமாக்கம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி – 2020/2021**

# Certificate Course in Urbanization, Climate change, Displacement and Relocation 2020/2021

# (Second Batch)

கொழும்புப் பல்கலைக்கழகமானது மேற்குறிப்பிட்ட கற்கைநெறிக்குத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது. இக்கற்கைநெறியானது ஜூன், 2021 இல் ஆரம்பமாகவுள்ளது.

மீள்குடியமர்வு, இடப்பெயர்வு, காலநிலைமாற்றம் மற்றும் நகரமயமாக்கம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி

**காலம்:** மூன்று மாதங்கள் (விரிவுரைகள் ஒவ்வொரு சனிக்கிழமையிலும் நடைபெறும்)

**அடிப்படைத் தகைமைகள்:**

(அ) பாடசாலையிலிருந்து விலகியதற்கான சான்றிதழ் (ஆகக் குறைந்தது தரம் ஒன்பது வரை)

அல்லது

(ஆ) ஆரம்பக்கல்வியைப் பூர்த்தி செய்திருப்பதுடன் இரண்டு வருடங்களுக்குக் குறைவில்லாத வேலை அனுபவச் சான்றிதழைக் கொண்டிருக்க வேண்டும்.

(இ) ஆகக் குறைந்தது 16 வயதினைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

அத்துடன்/அல்லது, தேவையேற்படின்

அனுமதி/தேர்வுப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் அத்துடன்/அல்லது நேர்காணல்

**மொழி மூலம்**: சிங்களம்/ஆங்கிலம்

**எவ்வாறு விண்ணப்பிப்பது**: விண்ணப்பப் படிவங்கள் மற்றும் கற்கைநெறிக் கையேடுகளைச் சமூகக் கொள்கைப் பகுப்பாய்வு மற்றும் ஆய்வு நிலையத்தின் (SPARC) வலைத்தளத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும் அல்லது உங்களின் சுய முகவரி இடப்பட்ட கடித உறையில் ரூ.15/- பெறுமதியான முத்திரையினை ஒட்டிக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைப்பதனூடாகவும் பெற்றுக் கொள்ளலாம். முகவரி - சமூகக் கொள்கைப் பகுப்பாய்வு மற்றும் ஆய்வு நிலையம் (SPARC), கலைப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம், குமாரதுங்க முனிதாச மாவத்த, கொழும்பு 03. கற்கைநெறியின் பெயர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்படல் வேண்டும்.

மீளப்பெற முடியாத விண்ணப்பக் கட்டணம் ரூ.2000/- இனை "University of Colombo Collection Account" 304043700003 என்ற வங்கிக் கணக்கிற்கு, மீள்குடியமர்வு, இடப்பெயர்வு, காலநிலைமாற்றம் மற்றும் நகரமயமாக்கம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறிக்காக ஏதேனும் மக்கள் வங்கிக் கிளையில் செலுத்த முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமூகக் கொள்கைப் பகுப்பாய்வு மற்றும் ஆய்வு நிலையம் (SPARC), கலைப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம், குமாரதுங்க முனிதாச மாவத்த, கொழும்பு 03 (Social Policy Analysis and Research Center, Faculty of Arts, University of Colombo, Cumaratunga Munidasa Mawatha, Colombo 03 ) என்ற முகவரிக்கு 15.08.2021 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**முடிவுத் திகதி**: 15.08.2021

கற்கைநெறி தொடர்பான மேலதிக விபங்களுக்குச் சமூகக் கொள்கைப் பகுப்பாய்வு மற்றும் ஆய்வு நிலையத்தினைத் (SPARC) தொடர்பு கொள்ளவும் (011-2589382)

அல்லது http://sparc.cmb.ac.lk/ என்ற வலைத்தளத்தைப் பார்வையிடவும்.

**பதிவாளர்**
**கொழும்புப் பல்கலைக்கழம்**